## ‘கலைஞர் நூலகம்’ அறிவித்து

# திருச்சியில் அறிவுச் சுடர் ஏற்றி வைத்திருக்கிறார், முதல்வர்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் கே.என்.நேரு நன்றி!

**சென்னை, ஜுன் 28- திருச்சியில் ‘கலைஞர் நூலகம்’ எனும் முதல்வரின் அறிவிப்புக்கு சட்டப்பேரவையில் நன்றி தெரிவித்து உரையாற்றிய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. “கலைஞர் நூலகம் அறிவித்து. திருச்சியில் முதல்வர் அவர்கள் அறிவுச் சுடர் ஏற்றி வைத்திருக்கிறார்” என்று குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

கிட்டத்தட்ட 50 ஆண்டு காலம் இந்த இயக்கத்திலும், தலைவர் கலைஞர் அவர்களுடனும், நம்முடைய முதல்வர் அவர்களுடனும், இப்போது விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுடனும் தொடர்ந்து பயணிக்கின்ற ஒரு காலம் எங்களுக்கு இருக்கிறது. இருந்திருக்கிறது; இருந்துகொண்டிருக்கிறது. எனவே, திருச்சி மாவட்டம், ஒன்றுபட்ட மாவட்டம்-திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், புதுக்கோட்டையின் ஒரு பகுதி-அனைத்தும் திருச்சி மாவட்டத்தினுடைய ஒரே பகுதியாக இருந்த காலத்தில், 1971 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், அந்தக் காலந்தொட்டு நம்முடைய தளபதி அவர்கள் இன்றைக்கு பொறுப்பேற்று 3 ஆண்டு காலத்தில் திருச்சி ஒன்றுபட்ட மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற திட்டங்கள் அனைத்துமே கலைஞர் அவர்களாலும், தளபதி அவர்களாலும் இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டு, திருச்சி மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இடையிலே 25 ஆண்டுகாலம் வேறு முதலமைச்சர்கள் இருந்தாலும்கூட, அவர்களுடைய காலத்தில் 2, 3 திட்டங்கள் மட்டுமே அவர்களுடைய காலங்களில் ஆரம்பிக்கப்பட்டன;

முதலமைச்சர் அவர்களுக்கு ஓர் உறுதியை நான் தேர்தலுக்கு முன்பும் சொன்னேன், இப்போதும் சொல்கிறேன். 44 தொகுதிகளைக் கொண்டது டெல்டா. கரூரில் ஆரம்பித்து நாகப்பட்டினம் வரை இருப்பது 44 தொகுதிகள். அந்த 44 தொகுதி மக்களும் உங்கள் பின்னால் நிச்சயமாக இப்போதும், எப்போதும் இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

### திருச்சி வேளாண் கல்லூரி!

எனவே, அப்படி பணியாற்றிக்கொண்டிருக்கிறீர்கள். ஏதோ விளையாட்டுக்காக, உங்களை சந்தோஷப்படுத்த வேண்டுமென்பதற்காகவே,முதஸ்துதிக்காகவோ அல்ல. நீங்கள் செய்கின்ற காரியங்கள்; நீங்கள் அந்த மக்களை நேசிக்கின்ற அந்தத் தன்மை; அந்த மக்களோடு, அந்த மக்கள் எப்படி உங்களிடம் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் கீழ் மட்டத்தில் இருக்கிறவர்கள் தெரிந்து வைத்திருக்கிற காரணத்தால் சொல்கிறேன். 1971-ல் எறையூரில் சர்க்கரை ஆலை, கலைஞர் உருவாக்கியது. 1971-ல் அரியலூரில் சிமெண்ட் ஆலை, கலைஞர் உருவாக்கியது. அதேபோல், 1989 ஆம் ஆண்டு தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று வந்தபோது, அண்ணன் கோ.சி. மணி அவர்கள் வேளாண் துறை அமைச்சர். அவர் இருக்கும்போது, ‘தஞ்சையில் வேளாண் கல்லூரி தொடங்க வேண்டும்’ என்று கேட்டார். இல்லை, 1976-ல் நான் அறிவித்திருக்கிறேன், திருச்சியில்தான் அந்த வேளாண் கல்லூரி என்று வேளாண் கல்லூரியும் கலைஞர் அவர்கள்தான் தந்தார்கள். மருத்துவக் கல்லூரியும் கலைஞர் அவர்கள்தான் தந்தார்கள்.

அதேபோல், திருச்சி அடிக்கடி வெள்ளம் வந்த பாதிக்கப்பட்டபோது, நேரடியாக அந்த இடத்திற்கு வந்து நின்று, அன்றைய தொகைக்கு 100 கோடி ரூபாய் செலவு செய்து, அன்றைக்கு செலவு செய்த காரணத்தால் இன்றளவும் எந்தத் தண்ணீர் பாதிப்பும் இல்லாத அளவிற்கு திருச்சி மாநகரம் இருக்கிறது என்று சொன்னால், கலைஞர் அவர்கள் செய்த காரியம் தான். இப்படி பொதுப் பணி மட்டுமல்ல, கிறிஸ்துவ மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. கிறிஸ்துவ கல்லூரிகள் இருக்கின்ற பகுதி. அவர்கள் தலைவரைத் தேடி வந்து, அந்தக் கல்லூரிக்கு தேவையானதை சொன்னால், சொன்னவுடன் மறுநாளே அவர்களுக்கு தேவையானவற்றை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் முதலமைச்சராக இருந்தபோது செய்து தந்தார்கள்.

இன்னும் ஒரு திட்டத்தை துவக்குகிறார்; நமக்கு நாமே திட்டம். அந்தத் திட்டத்தையும் முதன் முதலில் திருச்சி மாவட்டத்தில்தான் தலைவர் அவர்கள் துவங்கினார்கள். அதேபோல, தாம்பரம் அருகிலே இருக்கிற கல்லூரியைப் போல, காவல் பயிற்சி கல்லூரி ஒன்றை தொடங்குவதற்கு தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இடம் இல்லாத காரணத்தால் அது நின்றுவிட்டது. அதைப்போல, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அன்றைக்கு அமைச்சராக இருந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அங்கு இருக்கின்ற மக்கள் எல்லாம் எங்களுக்கு நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என்று சொன்னவுடனே, கலைஞர் அவர்கள் காவேரி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்து, எப்போதும் 1 TMC தண்ணீர் நிற்பதற்குரிய ஏற்பாட்டை அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் செய்த தந்தார்கள்.

மாயனூரிலே புதிய தடுப்பணை. குடகனாறு திட்டமெல்லாம் சொல்கிறார்கள்; கலைஞர் அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொன்னார்கள். நிலம் கையகப்படுத்துவதற்கு முன்பாக, குடகனாறு திட்டமும், காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக மாயனூர் தடுப்பணை, குடகனாறு தடுப்பணை, அதேபோல மணப்பாறையில் தடுப்பனை, கடலூர் பகுதியிலே ஒரு தடுப்பணை ஆகியவற்றையெல்லாம் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் செய்து தந்தார்கள். அதற்கு பிறகு, Court கட்டடங்கள். இன்றைக்கு High Court உள்ளதை போன்று, ஒரு புதிய Court கட்டடமும் கலைஞர் அவர்கள் காலத்தில்தான் கட்டப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகமும் புதிதாக அவருடைய காலத்தில்தான் கட்டப்பட்டது. கலைஞர் அவர்களுடைய காலத்திலே, அனைத்து உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளாக நம்முடைய தங்கம் தென்னரசு அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் உயர்த்தி தந்தார்கள். கல்லூரிகளை தரமுயர்த்தி, புதிய கல்லூரிகளை நம்முடைய தளபதி அவர்கள் தந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு தளபதி அவர்கள் பொறுப்பேற்று, மூன்று ஆண்டுக் காலத்தில் 1,000 கோடி ரூபாய் திட்டத்திலே, ரூ.380 கோடியிலே ஒரு புதிய பேருந்து நிலையம், ரூ.120 கோடியிலே lorry, truck நிறுத்துமிடம், ரூ.330 கோடியிலே புதிய மார்க்கெட் வளாகம், ரூ.300 கோடியிலே கோரையாறு பாலம், அதைப்போல elevated high way, மெட்ரோ திட்டங்கள். முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி உறுப்பினரிடம் உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்டபோது, நான் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் என்றவுடன், திருச்சி மாவட்டத்தின் பெரும் மருத்துவமனையில் 100 கோடி ரூபாய்க்கு புதிய கட்டங்கள் தந்து, அல்லிதுறை வரை ரூபாய் 138 கோடிக்கு புதிய சாலைகள் தந்து, லால்குடியில் புதிய மருத்துவமனை, மணப்பாறையில் புதிய மருத்துவமனை, துறையூரில் புதிய மருத்துவமனை, துறையூரை சுற்றியிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் bypass சாலை என அனைத்து அடிப்படை வசதிகளையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து தந்துள்ளார்கள்.

### கூட்டுக் குடிநீர் திட்டம்!

இன்னும் சொல்லபோனால் IT park. ரூ.600 கோடி செலவிலே IT park ஒன்றினை நம்முடைய தளபதி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். tollgate, திருச்சியிலிருந்து சிதம்பரம் வரைக்கும் நான்கு வழிச்சாலை. இன்றைக்கு மக்கள் ஒரு மணி நேரத்தில் செல்லும் வகையில் நான்கு வழிச்சாலையையும் அமைத்து தந்திருக்கிறார்கள். கல்லூரி, மருத்துவ மனை, சாலை வசதி, மெட்ரோ திட்டம் என்பதோடு அடிப்படைத் தேவையான குடிநீர் திட்டம். திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது சட்டமன்றத் தொகுதி மற்றும் அருகிலுள்ள குளித்தலை சட்டமன்றத் தொகுதி போன்ற அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நம்முடைய தளபதி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். குடிநீரும் தரப்பட்டுள்ளது; அப்படி உருவாக்குகிற குடிநீரை சுத்தம் செய்வதற்கு 100 MLD கொள்ளளவு கொண்ட STP-யும் நம்முடைய தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

இதையெல்லாம் நான் சொல்வதற்கு காரணம், எல்லா காரியங்களும், தலைவர் கலைஞர் அவர்களும், தளபதி அவர்களும் ஆட்சியில் இருக்கின்ற காலத்தில் மட்டுமே திருச்சி மாநகரம் முன்னேறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே கலங்கரை விளக்கமாக, நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மதுரை மாவட்டத்தில் திறந்தபோது, எங்களுக்கு இல்லையா? என்று கேட்டேன். அப்படி கேட்டபோது, கோவை மாவட்டத்திற்கு அறிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு திருச்சி மாவட்டத்திற்கு அறிவித்து, டெல்டா மக்கள் பகுதியில் அறிவுச் சுடர் ஏற்றி வைத்திருக்கிறார்கள். டெல்டா மக்கள் என்றைக்கும், உங்களுக்குபின்னால்இருப்போம்; உங்களுடைய உயர்வுக்கு பாடுபடுவோம். உங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.



மக்களவை சபாநாயகராக தேர்வு செய்யப்பட்டுள்ள ஓம் பிர்லாவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் வாழ்த்து தெரிவித்து, மலர்க் கொத்து மற்றும் வாழ்த்து மடலை வழங்கினார்.

## அறிவுசார்ந்த சமுதாயத்தை உருவாக்கும் முதல்வரின் கரத்தை - பள்ளிக் கல்வித்துறை மேலும் வலுப்படுத்தும்! திருச்சியில்

# ‘கலைஞர் நூலகம்’ எனும் கலங்கரை விளக்கம் உருவாக்கும் முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரை!

**சென்னை, ஜுன் 28- சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று 110 விதியின் கீழ் “திருச்சியில் கலைஞர் பெயரில் மாபெரும் நூலகம் உருவாக்கப்படும்” எனும் அறிவிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து - அவ்வறிவிப்புக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, “திருச்சியில் கலைஞர் நூலகம் எனும் கலங்கரை விளக்கம் உருவாக்கும் முதலமைச்சருக்கு நன்றி!” என்று குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடர் ஆரம்பித்ததிலிருந்து நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்; முதலமைச்சர் அவர்களுடைய விதி 110-ன்கீழான அறிவிப்புகளாக இருந்தாலும் சரி; அல்லது அரசினர் தீர்மானங்களாக இருந்தாலும் சரி; அல்லது அவர் ஆற்றுகின்ற உரையாக இருந்தாலும் சரி, அவற்றில், ‘எங்கும் கல்வி, எதிலும் கல்வி’ என்கின்ற வார்த்தைகள்தான் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டு சேவை, அறிவாற்றலை பரவலாக்குவது, சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து இது சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் பயன்படுகின்ற திட்டம் என்று கிராமச் சாலைகள் திட்டம் பற்றி பேசும்போது கூறினார். வேலைவாய்ப்பு என்று வரும்போது, அவர் மாதந்தோறும் 1,000 ரூபாய் தருபவர் மட்டுமல்ல, ஒரு மாதத்திற்கு சுமார் 1,000 ஆசிரியர்கள் என்ற வகையில், 18 மாதங்களில் 19,260 ஆசிரியர்களை நான் பணி நியமனம் செய்வேன் என்கின்ற அந்த ஓர் அறிவிப்பாக இருந்தாலும் சரி, அதிலும் கல்வி இடம்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒருகாலத்தில் நீ என்ன சாதி என்று கேட்ட கேள்வி, அது நீ படிக்கக்கூடாது என்பதற்காகக் கேட்ட கேள்வியாக இருந்தது.

இன்றைக்கு “நீங்கள் என்ன சாதி?” என்று கேட்கிறோம் என்று சொன்னால், கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் நாங்கள் இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டுமென்பதற்காக!

ஒன்றிய அரசை வலியுறுத்துகின்ற அந்தத் தீர்மானமாக இருந்தாலும், இன்றைக்கு அதன் தொடர்ச்சியாக “We are not social workers, we are contemplatives in the heart of the world” என்று அன்னை தெரசா அவர்கள் சொல்வார்கள். உண்மைதான். சமுதாய வளர்ச்சி என்று வரும்போது, அதனைச் சிந்தித்து செயல்படக்கூடிய ஒரு முதலமைச்சரை இன்றைக்கு நாம் பெற்றிருக்கிறோம்.

என்னதான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊர் என்று தஞ்சை மாவட்டத்தை சொன்னாலும், பொது வாழ்வில் சட்டமன்றத்தில் புகுந்த வீடாக அவரை அடையாளம் காட்டியது எங்களுடைய திருச்சி மாவட்டம் தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த விதத்தில் இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சருடைய இந்த அறிவிப்பு, டெல்டா மாவட்டத்தில்பூம்புகாரில் ஒரு கலங்கரை விளக்கம் இருக்கின்றது; அங்கிருக்கின்ற மாலுமிகளுக்கும், அங்கிருக்கின்ற கப்பல்களெல்லாம் கரை சேருவதற்கு. இன்றைக்கு இவருடைய அறிவிப்பு என்பது கலைஞர் பெயரில் நூலகம் என்ற கலங்கரை விளக்கம். இந்தக் கலங்கரை விளக்கத்தின் மூலமாக அறிவுசார்ந்த ஒரு சமுதாயத்தைப் படைப்பதற்கு, கரையேற்றுவதற்கு, அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு, இந்தக் கலங்கரை விளக்கம் அமையும்.

பூம்புகார், காவிரிபூம் பட்டினம் இது எங்களுடைய காவிரி பாய்கின்ற பட்டினம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘படித்தால் தாரேன்’’ என்று பல திட்டங்களைக் கொண்டு வந்தார்; ‘படிக்கத் தாரேன்’ என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு பலதிட்டங்களைக் கொண்டு வந்துகொண்டிருக்கிறார். ஆக, அந்த வகையில் எங்களுடைய திருச்சி மாவட்டத்திலிருக்கக்கூடிய மக்களின் சார்பாக, எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரின் சார்பாகவும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணன் சௌந்தரபாண்டியன், காடுவெட்டி தியாகராஜன், பழனியாண்டி, ஸ்டாலின்குமார், இனிகோ இருதயராஜ், அப்துல் சமது, கதிரவன்-இவர்கள் சார்பாகவும், ஏன் ஒட்டுமொத்த டெல்டா மக்களின் சார்பாகவும் எங்களுடைய நன்றிகளை நாங்கள் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கரத்தை வலுப்படுத்துகின்ற துறையாக எங்களுடைய பள்ளிக் கல்வித் துறை இன்றைக்கும் இருக்கும், கோவை நூலகத்திற்கும், இந்த நூலகத்திற்கும் நன்றி. இதற்கு உறுதுணையாக இருந்த எங்களுடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், நிதித் துறை அமைச்சர், அனைத்து நிலைகளிலும் இருக்கிற அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.



விக்கிரவாண்டி தொகுதி, காணை தெற்கு ஒன்றியம், வீரமூர் ஊராட்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி தலைமையில், உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் தேர்தல் பணிமனையை திறந்து வைத்தனர். கழக வேட்பாளர் அன்னியூர் சிவா (ஏ) சிவசண்முகம் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய குழுத் தலைவர் கலைச்செல்வி, ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி ராஜா , ஆர் முருகன், மு.தங்கம், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம்.சிவ.சக்திவேல் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் குப்பம் சிவக்குமார், துணைத் தலைவர் வீரராகவன், ஒன்றிய நிர்வாகிகள். பழனி, செல்வம், செல்வராஜ், மதன், கருணாகரன், சிவக்குமார் , புனிதா அய்யனார் , மாணவர் அணி அரங்கநாதன், வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், துணை அமைப்பாளர் பழக்கடை பழனிவேல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.


